மாநில தேர்தல் ஆணையம்
3வது மற்றும் 4வது தளம், தேர்தல் துறை அலுவலக வளாகம், லாஸ் தோட்டம், வில்லியனூர் மெயின் ரோடு, ரெட்டியார்பாளையம், புதுச்சேரி 605 010. தொலைபேசி : 0413 – 2291118, 2291028.
Website : https://sec.py.gov.in Email ID : secpdy.pon@nic.in

No.1-33/SEC/CE/E.1/2021/930 புதுச்சேரி, நாள் 08-10-2021

# செய்திக் குறிப்பு

மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 2021 வருடத்தின் W.P. Nos. 21067, 21117 மற்றும் 21708 மற்றும் 2021 வருடத்தின் வழக்கு எண் W.M.P. Nos. 22326, 22327, 22323, 22382, 22890, மற்றும் 22891 ஆகியவற்றின் மீது கடந்த 05-10-2021-ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையம், புதுச்சேரியில் உள்ள 5 நகராட்சிகள் மற்றும் 10 கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான உள்ளாட்சி தேர்தல்கள் நடத்துவதற்கான திருத்தப்பட்ட தேர்தல் கால அட்டவணையை இன்று 08-10-2021 வெளியிடுகிறது.

மேலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளில் உள்ள பதவிகளுக்கான உள்ளாட்சி தேர்தல்கள் நடத்துவதற்காக அட்டவணை இனத்தவர், அட்டவணை இன பெண்கள், பொதுப்பிரிவு பெண்கள், மற்றும் பொதுப்பிரிவினர் ஆகியோர்களுக்கான திருத்தப்பட்ட இட ஒதுக்கீடு அறிவிக்கைகளை புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம் முறையே நகராட்சிகளுக்காக எண். 1-31/ SEC/CE/Res-M/E4/2021-22/914 மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளுக்காக எண்.1-32/SEC/CE/Res-P/E4/2021-22/915-ல் 07-10-2021 தேதியிட்டு வெளியிட்டது.

புதுச்சேரி, யூனியன் பிரதேச உள்ளாட்சி அமைப்புகளுக்கான திருத்தப்பட்ட தேர்தல்கள் கால அட்டவணை பின்வருமாறு வெளியிடப்படுகிறது.

| நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்து | I. முதற்கட்டம் | II. இரண்டாம் கட்டம் | III. மூன்றாம் கட்டம் |
|---|---|---|---|
| நகராட்சி | புதுச்சேரி நகராட்சி | -- | காரைக்கால் நகராட்சி |
| | உழவர்கரை நகராட்சி | -- | மாஹே நகராட்சி |
| | -- | -- | ஏனாம் நகராட்சி |
| கொம்யூன் பஞ்சாயத்து | -- | அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து | கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து |
| | -- | பாகூர் கொம்யூன் பஞ்சாயத்து | நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து |
| | -- | மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து | நிரவி கொம்யூன் பஞ்சாயத்து |
| | -- | நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்து | திருமலைராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து |
| | -- | வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து | திருநள்ளார் கொம்யூன் பஞ்சாயத்து |
| அமைந்துள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | 631 | 634 | 364 |
| மொத்த வாக்காளர்கள் | 444199 | 328555 | 230502 |

2. மேற்குறிப்பிட்ட மூன்று கட்டங்களுக்கான தேர்தல்கள் நடக்கவிருக்கும் பதவிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்வருமாறு தரப்படுகிறது.

| | நகராட்சி | | கொம்யூன் பஞ்சாயத்து | | | |
|---|---|---|---|---|---|---|
| | சேர்மேன்கள் | கவுன்சிலர்கள் | கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர்கள் | கிராம பஞ்சாயத்து தலைவர்கள் | கிராம பஞ்சாயத்து உறுப்பினர்கள் | மொத்தம் |
| முதற்கட்டம் | 2 | 75 | - | - | - | 77 |
| இரண்டாம் கட்டம் | - | - | 81 | 81 | 634 | 796 |
| மூன்றாம் கட்டம் | 3 | 41 | 27 | 27 | 178 | 276 |
| மொத்தம் | 5 | 116 | 108 | 108 | 812 | 1149 |

...2

3. இப்புதிய தேர்தல் கால அட்டவணை பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

உள்ளாட்சி தேர்தலுகளுக்கான கால அட்டவணை

| | I. முதற்கட்டம் | II. இரண்டாம் கட்டம் | III. மூன்றாம் கட்டம் |
|---|---|---|---|
| வேட்பு மனு தாக்கல் துவக்கம் | 11-10-2021 | 15-10-2021 | 22-10-2021 |
| வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் | 18-10-2021 | 22-10-2021 | 29-10-2021 |
| வேட்பு மனு பரிசீலனை | 20-10-2021 | 25-10-2021 | 30-10-2021 |
| வேட்பு மனு திரும்பப் பெற கடைசி நாள் | 22-10-2021 | 27-10-2021 | 02-11-2021 |
| தேர்தல் நாள் | 02-11-2021 | 07-11-2021 | 13-11-2021 |

**மூன்று கட்ட வாக்குப்பதிவுகள் முடிந்த பின், அதற்கான வாக்கு எண்ணிக்கை 17-11-2021 அன்று நடைபெறும்.**

**வாக்குப் பதிவு நேரம் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. இதில் கடைசி ஒரு மணி நேரம் அதாவது மாலை 5.00 மணி முதல் 6.00 வரை "கோவிட் நோயாளிகள்" மற்றும் "கோவிட் தொற்று அறிகுறி" உள்ளவர்கள் வாக்களிக்க நேரம் வழங்கப்படுகிறது.**

இந்த அறிவிப்புடன் உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிமுறைகள் இன்று முதல் அமலுக்கு வருகின்றது. இத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கான சட்டங்கள் மற்றும் ஆணை தொடர்பான தகவல்கள், வார்டு வாரியான வாக்காளர் பட்டியல், வாக்குச்சாவடிகளின் விவரங்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் தொடர்பு எண்கள் உள்ளிட்ட அனைத்தும் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின், இணையதள முகவரியான https://sec.py.gov.in/ –ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மாநில தேர்தல் ஆணையம் ஊடகங்கள், வாக்காளார்கள், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் வேட்பாளர்களைச் சார்ந்தவர்கள், அதிகாரிகள் மற்றும் தேர்தல் பணியில் பங்குபெறும் ஊழியர்கள் அனைவரையும் முதல் மற்றும் இரண்டாவது தவணை கோவிட் தடுப்பூசி செலுத்தி இருக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. மேலும், கோவிட் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநில தேர்தல் ஆணையம், பேரணிகள், சாலையில் கூட்டம் சேர்வது, சைக்கிள் / மோட்டார் வாகன / இலகு ரக வாகனங்களில் பேரணி, பொதுக்கூட்டங்கள் மற்றும் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்புகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. மேலும், இந்த தேர்தலானது வாக்கு சேகரிப்பு பணிகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு குறைந்த காலம் மட்டுமே நடைபெறுவதற்கு மாநில தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இவை தவிர, கீழ்க்கண்ட எண்ணிக்கையிலான அ) நகராட்சி துணை தலைவர் ஆ) கொம்யூன் பஞ்சாயத்து அவை தலைவர் இ) கொம்யூன் பஞ்சாயத்து அவை துணை தலைவர் மற்றும் ஈ) கிராம பஞ்சாயத்து துணை தலைவர் பதவிகளுக்கான மறைமுக தேர்தலுக்கான அட்டவணை பற்றிய அறிவிப்பு மேற்குறிப்பிட்ட நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான பிரதான தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டபின் அறிவிக்கப்படும்.

| பதவியின் பெயர் | நகராட்சி துணை தலைவர் | கொம்யூன் பஞ்சாயத்து அவை தலைவர் | கொம்யூன் பஞ்சாயத்து அவை துணை தலைவர் | கிராம பஞ்சாயத்து துணை தலைவர் |
|---|---|---|---|---|
| பதவிகளின் எண்ணிக்கை | 5 | 10 | 10 | 108 |

எனவே இந்த அறிவிப்பின் மூலம், புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையத்தின் இத்திருத்தப்பட்ட அட்டவணை இனத்தவர், அட்டவணை இன (பெண்கள்), பொதுப் பெண்கள் மற்றும் பொதுப்பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டு அறிவிக்கைகளை அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. மேலும், இவ்வறிவிக்கைகள் , புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் அதிகாரபூர்வ இணையதளமான **https://sec.py.gov.in** – ல் ஆங்கிலம் மற்றும் தமிழில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த திருத்தப்பட்ட இட ஒதுக்கீட்டு அறிவிக்கைகளை கடந்த 20-09-2021 அன்று புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட 5 நகராட்சிகள் மற்றும் 10 கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான வாக்காளர் பட்டியலுடன் இணைத்து வாசிக்க வேண்டும் எனவும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட அறிவிப்பும் அதனைத்தொடர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவும், உச்சநீதி மன்ற தீர்ப்பு மற்றும் மாநில தேர்தல் ஆணையருக்கு இந்திய அரசியல் சட்ட விதி 243K மற்றும் 243ZA அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையமானது, பாதுகாப்பான மற்றும் சுமூகமான உள்ளாட்சி தேர்தல்கள் நடப்பதற்காக மேலும் ஒருமுறை அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பையும் இதன் மூலம் வேண்டுகிறது.

(ராய் பி தாமஸ்)
மாநில தேர்தல் ஆணையர்